**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No. 44/2017**

**சாட்சியின் சான்றுரை PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | இந்திராணி | வட்டம் | - | |
| க/பெ | - | ' கங்காதரன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 21.12.2022 அன்று 1969 ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.

வாதி சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி 9 முதல் 11 தரப்பில் குறுக்குவிசாரணை**

1 முதல் 8 பிரதிவாதிகளுடன் சேர்ந்து தான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. வா.சா2ல் சுப்பிரமணி ஆசாரி, பரமசிவம் ஆசாரி, கோவிந்தன் ஆசாரி ஆகியோர் தரப்பில் ஜமாபந்தி சிட்டா தாக்க் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.2ல் கண்டுள்ள பரமசிவம் வாரிசுகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். பரமசிவம் ஆசார் இறந்துவிட்டார். அவருக்கு 2 மகன்கள். அதில் மூத்த மகன் சுப்பிரமணி இறந்துவிட்டர். இளைமகன் இருக்கிறார் அவர் பெயர் முருகன். சுப்பிரமணிய ஆசாரிக்கு திருமணம் ஆகவில்லை. அவரும் இறந்துவிட்டார். கோவிந்த ஆசாரிக்கு திருமணமே ஆகவில்லை. சிறுவயதிலேயே இறந்துவிட்டார். பரமசிவம் ஆசாரியை குறித்து நான் வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். முருகன் ஆசாரி உள்ளதாக கூறியுள்ளேன். வாசா2ஐ 3 பேருக்கும் சொத்து உரிமை உள்ளது என்பதை காட்டுவதற்காக போட்டுள்ளீர்களா என்றால் ஆம். வம்சாவழி பட்டியல் எனது தாவாவுடன்

தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த வம்சாவழி பட்டியலில் சபாபதியின் தகப்பனார் பெயர் வைதிய ஆசாரி என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வம்சாவழி பட்டியலில் காட்டியுள்ள சிலர் இறந்துவிட்டதாக காட்டியுள்ளதற்கு இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பரமசிவம், ஆறுமுகம், சீனிவாசன், சாந்தாம்மாள், ரங்கநாதன் ஆகியோர்கள் சேர்ந்து ராமலிங்கம், சக்திவேல், கர்ணன் பேரில் அசல் வழக்கு எண் 846/1990 என்ற வழக்கை உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. ஆனால் அந்த வழக்கு பற்றிய விவரம் தெரியும் என்றும் ஏற்கனவே 19.10.1994ல் தள்ளுபடியாகிவிட்ட விவரமும் எனக்கு தெரியும் என்றால் தவறு எனக்கு தெரியாது. அதற்கு மேல் முறையீட்டு எண் 18/1995 என்ற எண்ணில் விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் 11,.03.1997 தேதியில் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் தெரியாது. அது எனக்கு தெரியும் என்றும் என் தாயார் நல்ல நிலையில் இருக்கிறார் என்றும் அவர் நீதிமன்றத்திற்கு வந்தால் உண்மையை சொல்லிவிடுவார் என்பதால் தான் நான் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எத்தனை மின் இணைப்பு உள்ளது என்றால் ஒன்று தான் உள்ளது. மின் இணைப்பு எண் தெரியாது. அந்த மின் இணைப்பு சாந்தாம்மாள் பெயரில் உள்ளது. அது சம்மந்தமாக ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தள்ளோமா என்றால் ஞாபகம் இல்லை. என் தாயார் தந்தை வழி வாரிசு என்று காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்திற்கு 9 முதல் 11 பிரதிவாதிகள் ஆவணங்களை ஜோடித்துள்ளார்கள் என்றால் நீதிமன்றத்தில்

கொடுத்துள்ளேன். அது என்ன ஆவணம் என்றால் பட்டா ஆகியவற்றை கொடுத்துள்ளோம். பழனி ஆசாரி மனைவி பூங்காவனம் என்று தெரியுமா என்றால் தெரியாது. ராமலிங்க ஆசாரி, சக்திவேல், கர்ணன் ஆகியோரின் பாட்டி பூங்காவனம் அம்மாள் என்றால் தெரியாது. அந்த சொத்தில் அவரின் சமாதி உள்ளது என்றால் தவறு. எங்கள் வகையராவில் தான் உள்ளது. முருகேச அசாரி தெரியாது. அவர் திருமணம் ஆகாமல் 1947ல் இறந்துவிட்டார் என்றும் அவரின் சமாதியும் அந்த சொத்தில் உள்ளது என்றால் சரியல்ல. என் தாயாருக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் 1 முதல் 8 பிரதிவாதியுடன் சேர்ந்து மீண்டும் ஒரு பொய் வழக்குபோட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.